உரிமைகள் அமைப்பு'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) மனித உரிமைகளையும் மனிதாபிமானத்தையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாத்தல் ;

(ஆ) மனிதாபிமானத்தையும், விளையாட்டுத்துறையையும் சமூக சேவையையும் வளர்க்கத் தூண்டுதல் ;

(இ) இயற்கை அனர்த்தங்கள் மற்றும் முறையற்றவிதமான மனிதர்களின் செயற்பாடுகளினால் ஏற்படும் விபத்துக்களுக்கு முகம்கொடுத்தவர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்க செயற்படுதல் ;

(ஈ) தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலும் மத, சமூக, கலாசார முக்கியத்துவம்வாய்ந்த விடயங்களில் பல்வேறுபட்ட விழாக்கள், கருத்தரங்குகள், உரையாடல்களை ஒழுங்குசெய்தல் ;

(உ) தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் ;

(ஊ) அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சகல மதகுருமார்களினதும் வழிகாட்டுதலின் கீழ் மதியுரைக் குழுவொன்றினை உருவாக்குதல் ;

